சீனாவில் சிவப்பு நட்சத்திரம்!

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (25—9—49) வெளியூர் (26—9—49) [இதழ் 47

புதுக் குடிஅரசு உதயம்

மாசி - டாங்கின் மகத்தான வெற்றி

முப்பதாண்டுகள் மும்முரமான போர்

கனவு, நனவாகிவிட்டது! காரிருள் நீங்கி, கதிரவன் உதித்து விட்டான்! களத்திலே மட்டுமல்ல, மக்கள் உள்ளத்திலேயும், மாபெரும் வெற்றிகிடைத்துவிட்டது. சீரழிவுக்கு ஓர் முடிவும், சிறப்பான வாழ்வுக்கு ஒரு துவக்கமும், கிடைத்துவிட்டது! போர் வெறியர்களின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு ஆடிவந்த நிலைமாறி, நாணமற்ற சீமான்களின் சூதிரக் கயிற்றிலே தொங்கிக் கொண்டிருந்த அடிமைத்தனம் ஒழிந்து, புதியதோர் நிலைமை, ஏற்பட்டுவிட்டது. திகிலும் திகைப்பும், புகையும் நெருப்புமபோல, கப்பிக்கொண்டு, மக்களை இருண்ட வாழ்க்கையில் இடரப்பட வைத்திருந்த நிலைமாறி, புதியதோர் நம்பிக்கை, நலமதோர் நிலைமை, உண்டாகி விட்டது. சின்னாபின்னமாகிவிடும், உருத்தெரியாமல் போயவிடும், ஓநாயிடம் சிக்கிய ஆட்டினகதிதான், என்று ஓயாமல் ஆருடமகூறி வந்த அங்கலாயப்புககாரர்களின், வாய் அடைத்துப் போகவும், விடுதலை கிடைக்கும், புது வாழ்வு கிடைக்கும், என்ற எண்ணம் கொண்டவர்களின் இதயத்தில் மலர்ச்சி பூத்திடவும், வழி பிறந்துவிட்டது. காடு கடந்தாகிவிட்டது—நாடு தெரிகிறது! கஷ்டம் பெரும் பகுதி ஒழிந்துவிட்டது. நலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றுகிறது! அலையில் சிக்கிய கலம், பாறைகளின் மீது மோதாமல், பக்குவமாகத் தப்பித்துக்கொண்டு, தங்குமிடத்தின் அருகே, வந்துவிட்டது. சீனாவில் புதிய குடிஅரசு தோன்றிவிட்டது! வெற்றி! வெற்றி! வேதனையைச் சகித்துக்கொண்டு, நெருப்பிலே நீந்திச்சென்று, எதிர்ப்புகளை அடக்கி, வெற்றிபெற்று, சீனாவை, பாசிசத்தலைமையிடமிருந்து விடுவித்து, மக்களாட்சியை, குடிஅரசை அமைத்து, மாநிலத்துக்கு, அறிவித்துவிட்டான், மாவீரன் மாசி-டாங்.

மகிழ்ச்சி அடைகிறோம்

அந்த மாவீரனும் அவனுடன் களம் நின்று, கடும் போரில் பணிபுரிந்த இலட்சக்கணக்கான போர் வீரர்களும், இலட்சியவாதிகளும், எந்த வெற்றிக்காக வாழ்வை மறந்து, பாடுபட்டு வந்தனரோ, எத்தகைய இலட்சியத்தைப்பற்றி இரவு பகல் ஏக்கத்துடன் எண்ணிக்கொண்டிருந்தனரோ, எவ்வித வெற்றிக்காக [illegible] தனரோ, அந்த வெற்றி கிடைத்துவிட்டது—சீனு குடிஅரசாகிவிட்டது! சியாங்கின சீனு, குடிஅரசுச் சீனுவாகிவிட்டது-சூதாடிகளின் மடம் மக்கள் மன்றமாக்கப்பட்டுவிட்டது—புரட்டர்களின் குகை, புது உலகக் கூடமாகிவிட்டது—மாசிடாங் வெற்றி பெற்றுவிட்டார்—திருநாட்டை மீட்டுவிட்டார் சீனநாட்டைச் சீனச்சீரழிவுக்காரரிடமிருந்து மீட்டுவிட்டார்-மக்களாட்சி அமைத்தாகிவிட்டதாக, உலகுக்கு அறிவித்திருக்கிறார்-மகிழ்ச்சி அடைகிறோம்.

'சிறுவனின் குறும்புத்தனம்'

மாவீரன் மாசி-டாங்-ஓநாய்கள உறுமிக்கொண்டிருந்தபோது, 'நிறுத்து அட்டகாசத்தை' என்று கூறத் துணிந்தார்—கேலி செய்தனர் பலரும்-சீனமக்களும். இந்தச் 'சிறுவனின்' குறும்புத்தனம் பாரீர், என்றே கூறினர். உண்மை வெல்லும் உழைப்பு

பலன் தரும், உறுதி, பகையை முறியடிக்கும், கொள்கையில் பற்று எத்தகைய ஆயுதத்தையும் கூர் மழுங்கச் செய்யும் கவசமாகும் என்றுஎண்ணினார் மாசி-டாங்-அவர் எண்ணம் சரி, என்பதை, உலகு உணருகிறது இன்று.

பிரசார பலம்—சியாங்க் பக்கமே!

சீனாவில் சியாங்கின் கொடி, உயரப் பறக்கும் நேரம்! உலக வல்லரசுகள் பலவும், சியாங்குடன் உறவாடும் சமயம்! திருமதி சியாங்கின் ஒரு வார்த்தையைக்கேட்க, இலட்சம் அமெரிக்கர்கள் திரண்டிடும் காலம்! காந்தியாரின் கைலாகும், ரூசிவெல்டின் நேசமும், சர்ச்சிலின் பாசமும், நேருவின் நட்பும், சியாங்குக்கு ஆபரணங்கள்! அவருக்கு ஈடு இல்லை-எதிர்ப்பவர் எவரும் இல்லை! அவர் இட்டது சட்டம்—தொட்டது துலங்கும், என்ற நிலை.

பெரியதோர்படை அவர் ஆணையைக் கேட்க-அதற்கு ஏராளமான ஆயுதம் அமெரிக்கத் தயவினால்! கட்டுப்பாடான, கோமிண்டாங் கட்சி அவருக்குச் செல்வாக்குத் தேட! அதற்குப் பிரசாரப் பீரங்கிகள், மிகப் பலமாக! சீனநாட்டுப் பிரபுக்கள் புடைசூழ, கொலு வீற்றிருந்தார் சியாங். சீனாவின் ரட்சகன் - ஆசியாவின் ஜோதி-அமெரிக்க நண்பன்-அதிசயபுருஷன்- ஆற்றல் மிக்கோன், என்றெல்லாம் அர்ச்சிக்கப்பட்டு வந்தார் சியாங்-அவன் ஓர் பாசிச வெறியன் - அமெரிக்க அடிமை—சீனநாட்டுச் சீரழிவுக்கு வழிகோலுபவன்-சர்வாதிகாரி-என்று கூறினான் மாவீரன் மாசி-டாங். சீனமக்களில் பலரே, நம்பமறுத்தனர். சியாங்கின் சிறந்த தாலமுதல் அறிந்த தலைவர்கள்-கட்சிகள்—பலப்பல — தன் வலி மாற்றான்வலி அறியாமல், குதிக்கிறானே இந்தக் 'குட்டித் தலைவன்'—என்று கூறினர்.

சீனாவை விடுவித்தவீரன் சியாங்-ஜப்பானை முறியடித்த வீரன் சியாங்—அவனிடம் மோதிக்கொள்ளவரும் இந்த அனுபவமற்ற மாசி—டாங் யார்!—என்று கேட்டனர். உலகில் உள்ள பிரபல பத்திரிகைகள்யாவும், சியாங்பற்றிய சிறப்புச்சிந்து பாடிக்கொண்டிருந்தன-மாசிடாங் பற்றிய தகவல் ஏதும், தருவதில்லை.

சியாங்கின் சிரிப்பு—அவர் நடத்திய விருந்து—ராணுவ உடையில் சியாங்-ராஜதந்திரிகளுடன் சியாங்-மனைவியுடன் சியாங் — என்று இப்படி விதவிதமான படங்கள் வெளிவரும் பத்திரிகைகளில்-பார்ப்போர் மனதிலே, என்ன எண்ணம் எழும்! சியாங்கே ஷேக், சீனாவின் ஒப்பற்ற தலைவன், என்ற எண்ணம் தானே, ஏற்பட முடியும். பிரசாரபலம் அவ்வளவு இருந்தது!

சியாங்கின் உண்மைத் தோற்றம்.

ஆனால், சியாங், ஓர் பாசிஸ்ட்! சீனநாட்டிலே, ஜனநாயகம் அரும்பாமல் அழித்து வருவதையே நோக்கமாகக் கொண்டவர் - மக்களை மயக்கி அடிமைகளாக்கி, பிறகு மிரட்டி, அடிமைத்தனத்திலேயே வைத்திருந்து, எதிர்த்திடத் துணிந்த போது, ஈவுஇரக்கமின்றி ஒழித்து வந்த சர்வாதிகாரி!

சியாங்கின் குடும்பம் சீனாவை ஆண்டு வந்தது!

குடும்பத்தினர் ஒவ்வொரு

[தொடர்ச்சி [illegible]]

மனித இனத்தை அரிக்கும் கறையான்கள்

ஒழிக்க ஆட்சிபீடத்தாருக்கு உளத்துணிவுண்டா ?

மத்தியமாகாண வர்த்தக அமைச்சர் கைத்தொழில் பொருட்காட்சி ஒன்றைத்திறந்து வைத்தபோது, 'மனித இனத்தை அரித்துக் கொண்டிருக்கும் கறையான்களைப் போன்ற சமுதாய விரோதிகளைப் போரிட்டு அழித்தொழிக்கவேண்டுமென்று நாம் ஒவ்வொருவரும் இன்று முதல் உறுதி செய்து கொள்ளவேண்டும்'' என்று கூறினார்.

உண்மையிலே மக்களினம் பொதுவாக நமநாட்டில் சமுதாய விரோதிகளால் நசுக்கப்பட்டு வருகிறது. அத்தகைய விரோதிகள் யாரென ஆட்சிப்பீடத்தார் அறிந்திருக்கலாமெனினும் இதோ பட்டியல் தருகின்றோம்.

1. கொள்ளை லாபக்காரர்கள், கள்ளமார்க்கட் காரர்கள், மக்களைப் பட்டினி கிடத்திவிட்டுத் தின்று கொழுக்கும் கூட்டத்தார், ஏழைகளைச் சுரண்டிவாழும் மக்கள்.

2. மதவெறியர்கள், மதப்பிரச்சாரங்களின் மூலமாக மதச்சண்டைகளைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருப்போர், பகுத்தறிவுப் பண்புகளும் முன்னேற்றக் கருத்துக்களும் மக்களிடையே பரவவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் வைதிகப் பித்துக்கள்.

3. ஊழல்களில் ஊறி நெஞ்சுரம் வாய்ந்த உத்தியோகஸ்தர்கள், இவர்கள் மக்களைப் பிழிந்தெடுத்து, அரசாங்கத்தையும் வஞ்சித்து, தங்கள் பணப்பையை நிரப்பிக் கொள்வதற்கு அஞ்சுவதில்லை.

4. தொழிலாளர்களுக்குரிய நியாயமான உரிமைகளை வழங்க மறுக்கும் முதலாளிகள், தொழிற்சாலைத் தலைவர்கள் முதலியோர்.

5. உழவர்களை வஞ்சித்து, தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளும் நிலச்சுவான்கள், மிராசுதார்கள், இனும் தாரர்கள், ஜமீன்தார்கள், முதலியோர்.

6. முதலீடு செய்யாமல் முடக்கிவிடுவதாக அரசாங்கத்தை மிரட்டியும், தொழிற்சாலைகளை மூடிவைத்தும், உற்பத்தியை மட்டுப்படுத்தியும், தொழிலாளர் நலன்களைக் கோரும் சட்ட திட்டங்களை அரசாங்கம் செய்ய முடியாமல் தடுப்பதற்கான செயல் முறைகளைக் கையாளும் பெரிய பெரியபணமூட்டைகள்.

இவர்கள் தானே சமுதாயத்தை அரிக்கும் கறையான்கள்! இல்லையென மறுக்க முடியுமா? இவர்களைத்தான் அழிக்க இன்றே உறுதி செய்து கொள்ளுமாறு கூறுகிறார் மத்திய மாகாணக் காங்கிரஸ் அமைச்சர் மேத்தா. வாய்ச் சொல்லில் வீரம் பேசிப் பயன் என்ன? இந்தச் சமுதாயப் பகைவர்களை ஒழிக்கும் வேலையை உடனே மேற்கொண்டு, நாட்டை முற்போக்குத் துறையில் முன்னணி பெறச் செய்ய முடியுமா? இன்றைய ஆட்சிப்பீடத்தாருக்கு! அத்தகைய நெஞ்சுரம் ஒரு சிறிதளவாவது இருக்கிறதா? நல்லாட்சி நடத்துவதாக மக்களிடம் உறுதி பேசி ஆட்சிப் பீடமேறிய அமைச்சர்களுக்கு! இல்லையென்றால், வெறும் பேச்சை வீரமாகப் பேசிக் கொண்டிருப்பதால் கிடைக்கும் பயன் என்ன? செயலாற்றாமல் இப்படிப் பேசிப்பேசிப் பாமர மக்களை வஞ்சிப்பது சமுதாயப் பகைவர் இனத்தில் சேர்க்கத் தூண்டுவதாக அமைக்கூடும்! எனவே, வீணில் வீரப்பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருப்பதைவிட, தம் [illegible] வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதே [illegible] நன்று.

"சனியன்"

அழகற்றதும், அகோரங்கொண்டதும், பீடை பயப்பதும், கேடு உண்டாக்குவதும் தான் "சனியன்" என்று பாமர மக்கள் நம்பிவருகின்றனர்.

விஞ்ஞான வழியில் நின்று பார்க்கும்போது, சனி கிரகம்தான்; இருக்கிற கிரகங்களுக்குள்ளே அழகான, உள்ளங் கவரும் கிரகமாகும். அதனைச் சுற்றி வட்ட வடிவத்தில் சிறுசிறு கோள்கள் நிறைந்து நின்று, பேரொளிபெருக்கி, எழிலை உமிழ்ந்து கொண்டிருக்கும். இதுதான் விஞ்ஞானம்.

பாக்யசாலி

பாகிஸ்தான் ஒரு விதத்தில் பாக்யசாலி என்றே கூற வேண்டும். பிரிட்டனின் நெருக்கடியைக் கண்டு, தன் ரூபாயின் மதிப்பைக் குறைத்துக் கொள்ளப் போவதில்லை என்று கூறி விட்டது ஒருமுறை, சஹ்ராவர்தி சொன்னார், பாகிஸ்தானில், தங்கம் விளைகிறது எமக்கென்ன குறை! என்று. அவர் குறிப்பிட்டது, சணல். இந்தச் சணல், ஏராளமாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகிறது — எனவே, ஏராளமான டாலர், பாகிஸ்தானுக்குக் கிடைக்கிறது. இந்தியா செய்தது போல, பாகிஸ்தானும், ரூபாயின் மதிப்பைக் குறைத்துக் கொண்டால், சணலின் விலையைக் குறைத்து விற்க வேண்டும் அமெரிக்காவில், அதனால் பாகிஸ்தானுக்குக் கிடைக்கக் கூடிய டாலரின் அளவும் குறையும். எனவேதான் பாகிஸ்தான், ரூபாயின் மதிப்பைக் குறைக்கவில்லை.

இந்தியாவுக்கு இனிக் கிடைக்கும் டாலர், குறையும்; அதே போது, பாகிஸ்தானுக்குக் கிடைக்கும் டாலர் அதிகமாகும். அந்த டாலரைக் கொண்டு, பாகிஸ்தான், அமெரிக்காவில் புதிய யந்திரங்கள் வாங்கி, தொழில் வளத்தைப் பெருக்க முடியும். பாகிஸ்தான், பாக்யஸ்தானாகிறது, கேருஸ்தான் நெருக்கடிஸ்தானாகிறது!!

இந்தியா, அவசரப்பட்டு, ரூபாயின் மதிப்பைக் குறைத்து விட்டது, என்று பலர் கருதுகின்றனர். இதனால் கெடுதியே அதிகம் என்று கருதுகிறார், A. D. ஷாப் எனும் பொருளாதார நிபுணர்.

ஒழுங்காக நடைபெறட்டும்

அரசாங்க உதவி பெறும் அனாதைக் குழந்தைகளின் விடுதிகள், ஹாஸ்டல்கள் முதலியவற்றில், தாழ்த்தப்பட்டவர்கள், ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்கே முதலிடம் தரவேண்டுமென்று கல்வி இலாக்கா டைரெக்டர் சுற்றறிக்கை விடுத்துள்ளார். ஹாஸ்டல்களிலும் விடுதிகளிலும் சேர்க்கப்படும் மேற்படி மாணவர்கள், பிராமணவர்களுடன் உணவு விஷயத்திலும் பிற விஷயங்களிலும் சமத்துவமாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதும் அவ்வதிகாரிகளுக்குக் கவனப்படுத்த வேண்டும். ஏனெனில் "மகரிஷி" வ. வெ. சு. குருகுலப் பரம்பரையில் அரசாங்க ஆதரவு பெற்ற விடுதிகளையும், ஹாஸ்டல்களையும் அவற்றின் அதிகாரிகளாயிருப்போரில் சிலர் நடத்த அவாவுறலாமன்றோ?

எனவே, இவ்விஷயத்தில் அதிகாரிகள் தக்க கவனம் செலுத்தி, வ. வெ. சு. வேலை எங்கும் நடைபெறுதபடி, சமத்துவமாக நடத்துமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

நற்சாட்சி!

நமது நேர்மை, ஒழுக்கம், நாணயம், சத்தியம் முதலிய அம்சங்கள் எல்லாம் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. நாம் ஒரு நாடு என்ற ரீதியில் முன்னேற வேண்டுமானால் ஒழுக்கம் குறையாமல் தடுக்கவேண்டும்.

—ஜவஹர்.

இலட்சார்ச்சனை பெறும் ராஜாக்கள்

—(o)—

கோலாகல வாழ்வுக்கு வழி

பணம் பாழாகும் படேல் திட்டம்

வெற்றி பெற்றது யார்?

மோர்வி சமஸ்தான மன்னர் சீமையில் ஒரு அழகான மாளிகையை விலைக்கு வாங்கியிருக்கிறார்.

மன்னர்களின் கோலாகல வாழ்வுக்கு சர்தார் வெடி வைத்து விட்டார் என்று பிரசாரம் செய்யப்படுகிறது— அதேபோது வெளிவரும் செய்தி, சீமையில் மாளிகை வாங்குகிறார் ஒரு சிற்றரசர் என்பது!

இவர் மட்டுமல்ல, இப்போது ராஜாக்களே, இப்படித்தான், புதிய மாளிகைகளை வெளிநாடுகளில் வாங்கிக் கொண்டு, குதூகலமாக வாழத் திட்டமிட்டுக் கொண்டுள்ளனர்.

ராஜ்யம் பறிபோய்விட்டதே என்று கதறுவார்கள்— அதிகாரம் போய்விட்டதே என்று ஆயாசப்படுவார்கள் என்று எண்ணினர், தெளிவற்றோர். அவர்களோ, எப்போதும் போலவே விருந்து வைபவத்தில் காலந்தள்ளிக் கொண்டுதான் உள்ளனர்.

மகாராஜாக்கள்—அதாவது மாஜி மகாராஜாக்கள், பலர், அடிக்கடி டில்லியிலும் பம்பாயிலும் கூடிக்கூடிப் பேசுகிறார்களாம்-அன்னியநாட்டு ஏஜண்டுகளுடன்.

இழந்த 'ராஜ்யங்களை'த் திரும்பப் பிடிப்பதற்காக, 'புரட்சி' செய்வதற்கு, ஆயுதங்கள் வாங்குவதற்காகவா, என்று எண்ணிவிடாதீர்கள்— நம்ம ராஜாக்கள் அந்த வேலைக்குப் போகும் வீரர்களல்ல!!

எங்கெந்த நாட்டிலே, என்னென்ன கிடைக்கும், விலைக்கு வாங்க-எந்த நாட்டிலே தாங்கள் குடி ஏறினால் குதூகலமாக வாழ முடியும், என்ற விசாரணையில் ஈடுபட்டிருக்கிறார்களாம் இந்த தர்பார் சுந்தரர்கள். விலையுயர்ந்த வைரங்கள் அபூர்வமான பச்சைக்கற்கள், உள்ளன, வாங்குவார் உண்டா உங்கள் நாட்டிலே, என்று கேட்கிறார்களாம், அன்னியநாட்டு ஏஜெண்டுகளை.

உங்கள் நாட்டிலே அழகான அரண்மனைகள், பெரிய பண்ணைகள், பந்தயக் குதிரைகள் கிடைக்குமானால், நாங்கள் வாங்கிக்கொள்கிறோம், விலை விசாரித்துத் தகவல் கொடுங்கள், என்றும் ராஜாக்கள் கேட்கிறார்களாம்.

ராஜ்யம் போய்விட்டதால், தொல்லைபோய்விட்டதாகவே, கருதுகிறார்கள் இந்த ராஜாக்கள்—ஏனெனில் வீரமோ, திறமையோ துளியுமற்ற இவர்கள், மக்களின் உரிமை உணர்ச்சி திரண்டெழும் காட்சிகளிலே, நிலைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார்கள்-எனவே தானாகவே சரியப்போகும் அதிகாரத்துக்கு, 'பணமும்' கொடுத்து, வழியனுப்பு உபசாரம் செய்ய, படேல முன் வந்ததும், இந்த ராஜாக்கள், மிக மிக மகிழ்ச்சியுடன், இந்த விடுதலையை வரவேற்கலாயினர். சர்தார் படேலின் சாமர்த்தியத்தினால் சமஸ்தானாதிபதிகள், கத்தியின்றி இரத்தமின்றி, விரட்டப்பட்டு விட்டனர், என்று பெருமையாகப்பேசப்படுகிறது-ஆனால் உண்மையிலே, பணத்தை எவ்வளவு கொட்டிக்கொடுத்து இந்த ராஜ கோலாகலர்களைச் சாந்தப்படுத்திஇருக்கிறார் சர்தார்என்பதைப் பார்க்கும்போதுதான், உண்மை விளங்கும்.

ராஜஸ்தான் என்று அழைக்கப்படும் வட்டாரத்திலே, பல ராஜாக்கள் இவர்களைஎல்லாம் விலகும்படிச் செய்து, அந்த அந்த சமஸ்தானங்களை ஒரே அமைப்பாக்கி விட்டார் சர்தார் என்று பெருமை பேசுகிறார்கள்.

இதற்காக, செலவு எவ்வளவு என்ற கணக்கைப் பொதுமக்கள் அறியாமல் இருக்கும் வரையில்தான் பூரிப்பும் பெருமையும் கொள்ள முடியும். செலவுத் தொகையைக் கணக்கிட்டால், பொதுமக்கள், மனம் பதறுவர்.

மாஜிகளான ராஜாக்களுக்கு ஆண்டுக்கு இவ்வளவு என்று, 'பென்ஷன்' தர ஒப்புக்கொண்டிருக்கிறது, சர்க்கார். இந்தப் பென்ஷன் தொகை, ராஜஸ்தான் வட்டாரத்துக்குமட்டும், ஆண்டுக்கு 82,97,000 ரூபாயாகிறது! இவ்வளவு பெருந்தொகையைச் செலவிட்டுத்தான், சர்தார் வெற்றிபெறுகிறார்!!

கசக்குமா, ராஜாக்களுக்கு, கவலையற்று வேலையற்று, ஆண்டுதோறும் இவ்வளவு பணம் பெற்றுக் கொண்டு, சுகபோக வாழ்வு நடாத்த.

ராமன், கிருஷ்ணன், படங்கள் இருந்த இடத்திலே, சர்தார் படத்தைத் தொங்கவிட்டுப் பூஜை அல்லவா செய்வார்கள்!

ஜெயப்பூர் மன்னர்		-18,00,000
ஜோத்பூர்	,,	-17,50,000
பிகானீர்	,,	-17,00,000
மீவார்	,,	-10,00,000
கோட்டா	,,	- 7,00,000
பூந்தி மன்னர்		— 2,81,000
டோங்கி	,,	- 2,78,000
கங்காபூர்	,,	- 1,98,000
திஷ்ணுக்கரா	,,	- 1,36,000
பன்ஸ்வாரா	,,	- 1,26,000
ஜால்வார்	,,	- 1,26,000
பிரதாப்கார்	,,	- 1,02,000
ஷாபூரா	,,	- 1,00,000

என்று இப்படி இருக்கிறது பென்ஷன் பட்டியல்! ஏழை எளியவர்களின் வயிற்றிலடித்து, ராஜாக்கள், அலங்காரப் பொம்மைகளாகக் கொலு வீற்றிருக்கிறார்கள்; என்ற பேச்சு பழசாகிப் போச்சு! அவர்களின் காலடியிலே, காரணமின்றி லட்சலட்சமாகப் பணத்தைக்கொட்டிக் கொடுக்கிறது காங்கிர சாட்சி. பாடுபடாமல், வசூலிக்கும் தொல்லைகூட இல்லாமல், 'லட்ச லட்சமாக'ப் பணம் கிடைக்கும் போது, இந்த ராஜாக்கள், வெளி நாட்டு ஏஜெண்டுகளிடம் குலவி, சீமையில் அரண்மனையும், பாரிசில் பங்களாவும், இத்தாலியில் குதிரைகளும், ஏன் வாங்கமாட்டார்கள்!

இவ்வளவு பெருந்தொகையை அவர்களுக்குக் கொட்டித்தரவேண்டிய அவசியம் என்ன?

பரம்பரை பாத்யதைக்காகவா இவ்வளவு பணம் பாழாக்கப்படுவது! இலட்சார்ச்சனை செய்து, அவர்களின் ஆவேசத்தை அடக்கும் போக்கு, வீரம் என்றோ, விவேகம் என்றோ எப்படிக் கூறமுடியும்!

இவர்கள் இத்தனை பெருந்தொகைதராவிட்டால், எதிர்த்துப் போராடி சர்க்காரை வீழ்த்தி விட்டிருப்பார்களா— களமே கண்டறியாதவர்கள்-துள்ளுமத வேட்கைக் கணையாலே தொல்லைப்படுபவர்— மாதரின் மலரடி எனும் கவசத்தைப்பூண்டு, தொல்லையைப் போக்கிக் கொள்பவர்கள்!! இவர்களுக்கு இவ்வளவு பணம் தருவது வீண்— அக்ரமம்—வீரமல்ல!!

தெலுங்குக்கு அடிப்படை தமிழே!

"தெலுங்கு மொழியை நன்கறிந்து, அதன் இலக்கியச் சுவையை நுகரவேண்டுமானால், அதற்குத் தமிழ் மொழியை நன்கு தெரிந்து கொண்டிருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். தமிழ் மொழியின் இலக்கணம், அணி இலக்கணம் இவைகளை அடிப்படையாகக்கொண்டே தெலுங்கு மொழிக்கும் இலக்கணம் அமைந்திருக்கிறது. தமிழ் தெலுங்கு மொழி இலக்கியங்களுக்குள்ள தொடர்பு சுமார் 10வது நூற்றாண்டிலிருந்தே இருந்துவருகிறது. கிழக்கு கோதாவரி ஜில்லாவிலுள்ள திராக்கறாமா என்ற இடத்திலுள்ள பீமேஸ்வர் கோவிலில், 10வது நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட கல்வெட்டில் தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன."

—என். வெங்கட்ட ராவ்

சென்னை பல்கலைக் கழகத் தெலுங்கு ஆராய்ச்சி இலாகாத் தலைவர்.

இவர் 25 ஆண்டு காலமாக தெலுங்கு மொழி ஆராய்ச்சி நடத்தி வருகிறார்.

தமிழர் பணம் மலேயாவில் படும்பாடு

மலேயாவில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் 100 ஆண்டுகளுக்குமுன் வட்டிக் கடைக்காரர்களாகச் சென்று, இப்போது 700 வாணிக நிலயங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். செட்டியார்களுக்கு அங்கு 20 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்து இருக்கிறது. 1,70,000 ஏக்கர் நிலம் அவர்களுக்கு அங்குச் சொந்தம்.

ஆனால், கடனாளி முதலாளி அவசரசட்டம், நிலப்பட்டா அவசர சட்டம் முதலியவற்றின் மூலம் மலேயா அரசாங்கம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் இவர்களைப் பெரிதும் பாதிக்குமாகையால், இவர்கள் மலேயாவில் தங்கள் வாணிகத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்ப எண்ணியிருக்கின்றனராம்.

இந்திய அரசாங்கம் இதில் தலையிட்டு, இவர்களுடைய சொத்து அன்னிய நாட்டில் பாழாகாமல் காத்துத்தர ஏற்பாடு செய்ய வேண்டும். செட்டியார்களும் சுரண்டும் தத்துவங்களைக் கைவிட்டு, தாய் நாட்டில் பல நல்ல தொழில்களைத் துவக்க, விவசாயத்தைப் பெருக்க, முதலீடு செய்து தாய் நாட்டு நலனில் இனியாவது அக்கறை கொள்வது நலம்.

கன்னித் தமிழ் வளர்க்க அழைக்கிறார் ஆஸ்தான கவிஞர்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாரதி பாடிய உணர்ச்சி எல்லோருக்கும் வர வேண்டும். அப்போதுதான் தமிழ் நாடு பழங்காலம் போலச் சிறப்புற்றிருக்கும். தமிழன் தன் பண்புகளைக் காக்கவேண்டும். தமிழ் நாட்டில் எவ்வளவு வேறுபாடுகளிருப்பினும் 7000 ஆண்டுகளாக வளர்ந்த தமிழைக் குன்றாமல் தளராமல் தைரியமாய்க் காக்கவேண்டும்."

என்று சென்னை ஆஸ்தான கவிஞர் தோழர் இராமலிங்கனார் நெல்லை ம. தி. தா. ஹிந்து கல்லூரியில் கூறினார்.

பழங்காலச் சிறப்புடைய தமிழ் நாடும், தமிழ்ப் பண்பும், 7000-ஆண்டுகளாக வளர்ந்துவரும் தமிழும் காக்கப்பட வேண்டுமானால், இந்தியைப் பரப்ப, சமஸ்கிருதத்தைப் பரப்ப, அவற்றினைத் தமிழோடு கலந்துவைக்க, அவற்றின் காரிகம் தமிழன் முதுகின்மீது சவாரி செய்யுமாறு பண்ணச்செய்யப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு காட்டலாமா? ஒரு புறம் அவற்றிற்கு ஆதரவு காட்டுவதும் மற்றொரு புறம் பழந்தமிழ்ச் சிறப்பை விரும்புவதாகப் பேசுவதும் நேர்மைதானா?

பழந்தமிழ்ச் சிறப்பை விரும்பினால், நாட்டில் மேல்சாதி-கீழ்ச்சாதி போக வேண்டாமா? பார்ப்பான் பறையன் என்ற பெயர்கள் இருக்கலாமா? தமிழன் என்று கூறிக்கொண்டே, சமஸ்கிருதத்தை உயர்ந்த மொழியிலையாகையால் அதையே அனைவரும் படிக்க வேண்டுமென்று கூறுபவனைத் தமிழனாக மதிக்கலாமா? தமிழே வேண்டுமென்றோ அறியாமையாலோ அவசியமில்லாத அளவுக்குச் சமஸ்கிருதங்களை நிறையக் கலந்து எழுதுபவனும் பேசுபவனும் தமிழனாக முடியுமா? கூறும் புலவரே! சிந்தித்துப் பார்த்து, பேச்சுக்கும் செயலுக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதை மனத்தில் பதித்து ஒரு முடிவுக்கு வாரும்.

கலை பிறரைக் கொலை செய்தால் ...

அக் கலையை அழிக்கும் கவலை ஏன் தோன்றுது ?

'சர். சி. பி. மயிலை இராமகிருஷ்ண மாணவர் விடுதியில் பேசுகையில் "இந்து கலாசாரம் ஓர் உள்ள லட்சிய முடையது. வெளியிலிருந்து வரும் சில்லறைத் தாக்குதல்களால் அக்கலையை அசைக்கக் கூட முடியாது"

என்று கூறினர். ஒரு இனத்தவருடைய கலையை அசைக்கவோ, அழிக்கவோ எவரும் கவலையெடுத்துக்கொள்ள மாட்டார்கள். அப்படிச் செய்வது அநாகரீகம்.

ஆனல் அக்கலை, பிற மக்களுடைய கலாசாரத்தை அழித்து, முட்புதராகப் பரவி, பாம்புகள் குடிபுக வேலை செய்தால், மக்கள் முதலில் அதற்கிடங்கொடுத்துவிட்டிருந்தாலும், விழிப்புணர்ச்சி பெற்ற பிறகாவது அம்முட்புதர்களை ஒழித்துஒழுங்கு செய்யத் தானே முயல்வர்.

இந்து கலாசாரம் இந்துக்களுக்குச் சிறந்ததாக இருக்கலாம். அவர்கள் அதை வானளாவப் புகழ்ந்து பின்பற்றி மகிழலாம். ஆனல் அக் கலாசாரம், தமிழ் நாட்டில் புகுந்து தமிழர்களுடைய நாகரிகக் கலையை நாசம் செய்து, மக்களைப் பல்வேறு இனத் தவாரய்ப் பிரித்து, உயர்வு தாழ்வு பேதங்களைப் புகுத்தி, தீண்டாமைக் கொடுமையைக் கையாண்டு, தமிழ்நாட்டுத்தலைச்சிறந்த கலையைக் கொலை செய்த தென்றால், அக்கலையை உண்மைத் தமிழன், தமிழ்ப் பண்பாடுடைய தமிழன் எவனுவது விரும்பவோ, புகழவோ, ஏற்கவோ முடியுமா?

எனவேதான், இந்து கலாசாரம் ஆக்ரமிக்க முயலும் போதெல்லாம் தமிழன் அதனை வன்மையாகக் கண்டித்துள்ளான். இன்றல்ல நேற்றல்ல, இந்நாட்டிலே இந்து கலாசாரம் புகுந்து அட்டூழியம் புரியத் தொடங்கிய நாளிலிருந்தே தமிழ் நாட்டில் அக்கலை வன்மையாகத் தாக்கப்பட்டிருக்கிறது. இன்று மிக மிக வன்மையாகத் தாக்கப்படுகிறது.

இத் தாக்குதல், தமிழர்களுடைய உள்ளக் கொதிப்பினின்றெழும் குமுறல்,சர் சி. பி.க்குச் சில்லறைப் பொடித் தாக்குதலாகத் தோன்றலாம். இந்து கலாசாரம் எவராலும் அசைக்க முடியாததாகத் தோன்றலாம். ஆனல் இத்தாக்குதல் ஒரு பெரிய நாகரிகச் சமுதாயத்தின், நாடாண்ட மரபினரின், உலகிற்கு நாகரிகம் கல்கிய, உயர்தனிப் பெரும் இனத்தவரின் உள்ளக் கொதிப்பின் அறிகுறி என்பதைத் தோழர் சர். சி. பி. அறிந்திராமலில்லை. அக் கலாசாரம் அசைந்து விட்டது, ஆட்டங் கொடுத்து விட்டது என்பதை அறிந்திராமலில்லை. இந்தியா முழுவதிலும் தந்திரம் ஒன்றினலேயே பரவிய அக்கலாசாரம், இந்தியாவின் மக்களனைவரையும் தன் பிடிப்புக்குள் சிக்க வைத்திருந்த அக்கலாசாரம், இன்று இந்தியாவின் பல பகுதிகளிலும், மக்களுள் பெரும் பகுதியினரையும் இழந்து விட்டது என்பதை அவர் அறிந்திராமலில்லை. "இந்துக்கள் என்பவர்களுக்குள்ளேயே பலர் அக்கலாசாரத்தைப் பற்றிப் பேசுவதற்கே நடுக்கங் கொள்கிருர்கள்; பெரிய தலைவர்கள் கூட, இந்து மதம்-கலாசாரம் எனத் தெளிவுபடப்பேசுவதில்லை; அதைப் பற்றி நேரிடையாகப் பேசுவதற்கு அவர்கள் கூடத் தயங்குகிருர்கள்" என்று, தாமே அக்கூட்டத்தில் கூற வேண்டிய நிலைமை வந்து விட்டதே என்பதையும் அவர் அறியாமலில்லை.

எனினும் விட்டுக் கொடுக்க மனம் வருமா? தன் பிள்ளை தவறுனவன் என்றுல் பெற்றேர் காட்டித் தருவாரா? அது போன்றதுதான் சர் சி. பி. பேச்சும்.

செயலில்!

"நம்முடன் காஷ்மீரிகள் உறவு வைத்துக் கொள்ள விரும்பினுல் உறவு வைத்துக்கொள்ளட்டும். நாம் அங்கிருப்பதை அவர்கள் விரும்பவில்லையானுல் நாம் அங்கு போகமாட்டோம்."

—ஜவஹர்.

கல்வி நிலையங்களில் சமயக் கல்வி ஏன்?

தலைமை ஆசிரியர்கள் கழகச் சட்ட மென்று சென்னையில் திரு கே. குருவில்லா ஜேகப் தலைமையில் கூடிய போது,

"நாட்டில் பல்வேறு வகைப்பட்ட சமயஙகளைச் சேர்ந்தவர்களுடைய மக்கள் பள்ளிக்கூடஙகளில் படிக்க வருவதால், பள்ளிகளில் சமயக்கல்வி கற்பித்தல் வேண்டுமென்று கூறுவது ஒழுஙகாகாதென்றும், சமயக்கல்வி என்பதென்ன வென்பதை விளக்க வேண்டுமென்றும், சமயக் கல்வி சமய அனுஷ்டான முறைகள் முதலியவற்றைப் பெற்ருேர்கள் வீட்டிலேயே சற்பிப்பதுதான் சிறந்ததென்றும், அல்லது அதற்கெனத் தனிப்பள்ளிகள் வைத்து அவற்றில் கற்பிக்கலாமென்றும், பொதுப்பள்ளிக் கூடக்கல்வித் திட்டத்தில், சமயக் கல்வியைச் சேர்க்கக்கூடாதென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இது மிகவும் சிறந்த, அறிவுக்கொத்த, அனுபவ பூர்வமான தீர்மானமாகும். அரசாஙகமும், பல்கலைக் கழகத்தவரும், இதனை நன்கு மனத்தில்பதிடவைத்து,ஊழல்களை உண்டு பண்ணவும், வீண்பகைமைகளையும்,தொல்லைகளையும் ஏற்படுத்தவும், பகுத்தறிவை மங்க வைக்கவும காரணமாக உள்ள சமயக்கல்வியைப் பாடத் திட்டத்தில் சேர்த்து, மாணவர்களின் காலத்தையும் அறிவையும் பாழ்படுத்த வேண்டாமென்று கூறுகிருேம். அரசாஙகம் பல்கலைக் கழகமாகியவற்றின்மனம் இதில் விரிவு பெறுமா?

அண்ணுமலை நகரில்



21-9-49-ல் நடைபெற்ற அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆங்கிலப்பேரவைக் கூட்டத்திற்குச் சென்றிருந்த தோழர் சி. என். அண்ணுத்துரை அவர்களை ரெயிலடியில் மாணவர்கள் மாலையிட்டு வரவேற்கும் காட்சி.

நினைவு நிதி பத்துக்கோடி

பயிர் விளைவு பெருகப் பயன் படுத்தலாமே!

காந்தியடிகளின நினைவு நிதிக்கு 1949 ஆகஸ்டு முடிய, பத்துக் கோடியே 34½ லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. இவ்வளவு பெருந்தொகையை மண்டபங்கள் கட்டி, சிலை வைத்து,பாழாக்கிவிடுவதைவிட, காந்தியடிகளின் உயிர்க்குயிரான திட்டமாகிய, கிராமவாசிகளின் நிலையை உயர்த்த, உழவுத் தொழிலைப் பெருக்க, நவீன வசதிகளுடன் உழவுத்தொழிலை விவசாயிகளிடையே புகுத்த, புறம்போக்கு நிலங்களைப் பயிரிடப் பயன் படுத்தினுல் நாட்டு நிலை உயரும்; மக்கள் நிலை உயரும். பஞ்சத்தை விரட்டும் பணியில் பங்கெடுத்த நலன் கிட்டும். முன் வருவாரா நிதியாளர் இந்நற்பணியாற்றுதற்கு?

நன்றே செய்க; இன்றே செய்க

தாமிரவர்ணி ஆற்றின் மூலம் திருச்செந்தூர், காயல்பட்டினம் உட்பட மொத்தம் 11 ஊர்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்க ரூ. 34·5 லட்சம் செலவில் ஒரு திட்டமிடப்பட்டிருக்கிறது. அதேபோன்று பாலாறு பிரதேசத்தில் கரையோர ஊர்களில் உள்ளவர்கள் பாலாற்றில் கிணறுகள் வெட்டிக்கொள்ள அனுமதிப்பதென்று யோசனை நடப்பதாகத் தெரிகிறது. இது மட்டும்போதாது. வாய்க்கால்கள் வெட்டிச் சற்றுத் தொலைவாகவுள்ள கிராமங்களுக்கும் நீர்பாசன வசதி உண்டுபண்ண வேண்டும். பாலாற்றில் ஓர் அணைக்கட்டுக்கட்டி அதில் வரும் தண்ணீர் பாழாகி விடாமல் தேக்கிவைக்கவும் முயற்சி செய்ய வேண்டும். இதனுல் செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய இரு ஜில்லாக்களும் நன்மை அடைய முடியும். வேறு அனாவசிய-ஆடம்பர செலவுகளை நிறுத்தி விட்டு, இதை முதலில் கவனிக்க முன்வர வேண்டும் அரசாங்கம். மக்களுக்கு நன்மைசெய்யக்கூடிய திட்டங்களை ஏட்டில் போட்டு வைப்பதோ ஆலோசனையில் விட்டு வைப்பதோ கூடாது. நல்லவற்றை நாளை யென்று ஒதுக்காமல் இன்றே செய்க.

"உயிரோவியம்" நாடகம்

சென்னை, செப். 23—

நேற்று வெள்ளிக்கிழமை மாலை சென்னை ஒற்றை வாடை தியேட்டரில் "உயிரோவியம்" நாடகம் ஆரம்பம் 'இந்து' துணை ஆசிரியர் என். ரகுநாத அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது நாடகத்தின் நடுவில் கதா நாயகியாக நடித்த தோழியர் திரௌபதிக்கு எதிர்பாராதவாறு திரைக்குள் போகும் போது சீன் எடுத்து வைக்கும் ஆளுடன் மோதித் தலையில் காயம் ஏற்பட்டது. ஆதலால் தவிர்க்க முடியாதபடி நாடகம் இடையில் நிறுத்தப்பட்டது.

எனவே இதன் காரணமாக உயிரோவியம் நாடகம் நிறுத்தப்பட்டு, ஒருவாரத்துக்கு டி.கே. எஸ். சகோதரர்களின் பிரசித்தி பெற்ற "ஔவையார்" நடத்தப்படும். 4-10-49 முதல் மீண்டும் "உயிரோவியம்" தொடர்ந்து நடைபெறும், (ஒ-கி)

குற்றப் பரம்பரையிருப்பது ஆளுவோர் திறமைக்கு அழகுதருவதா?

குற்றப் பாரம்பரையினர் என்று மக்களுட்சிலர் பெயரிடப்பட்டு, அவர்களுக்கெனத் தனிச்சட்டமும் இருந்து வருகிறது. இது பற்றி ஆலோசிக்க, ஐவரடங்கிய குழு ஒன்றை மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. இச்சட்டத்தைத் திருத்துவதா? ஒத்து செய்வதா என்பதே இக்குழு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய வேலையாகும்.

குற்றப் பாரம்பரை என்னும் பெயருடன் ஒரு சட்டம் நாட்டில் இருப்பதே, நாடாள்வோரின் திறமையின்மையை நன்கெடுத்துக் காட்டுவதாகும். ஆட்சிபுரிவோர் திறமையற்றிருந்தால் குற்றம் புரிவோர், பாரம்பரை பாரம்பரையாகக் கிளம்ப வேண்டியது தானே! வெள்ளையர் ஆட்சியில் ஏற்பட்ட இந்த வேடிக்கைப் பாரம்பரைகளை நம் நாட்டவராட்சியிலாவது ஒழித்துத் தொலைத்து, அப்பாரம்பரை மக்களை மேனிலைக்குக் கொண்டு வரப் பெருமுயற்சி எடுக்காவிடின், பயன் என்ன? எனவே, குற்றப் பாரம்பரை என ஒரு பாரம்பரைப் பெயர் இந்நாட்டில் இல்லாதபடி செய்ய, மத்திய அரசாங்கக்குழுவும் அரசாங்கமும் முடிவு செய்ய வேண்டுகிறோம்.

இந்தி எதிர்ப்புத் தொண்டருக்கு நீதி

திருவையாறு, செப். 20—

இவ்வூரில் சென்ற ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்பு ஊர்வலம், அடையாள மறியல் இரண்டிலும் கலந்து கொண்ட திரு. ந. ராமகிருஷ்ணன், பத்து ஆண்டுகளாக, தா. மாணிக்கம் செட்டியார் சன்ஸ் & கோ அ. சண்முகம் செட்டியார் இரும்புக் கடையில் வேலை பார்த்து வந்தவரை இந்தி எதிர்ப்பில் ஈடுபடுவதாகக் காரணம் காட்டி 14 9 48ல் வேலையிலிருந்து கடை நிருவாகியால் நீக்கப்பட்டார். பின்னர், வேலையிலிருந்து நீக்குவதற்கு தக்கக் காரணம் இல்லை என்று லேபர் கமிஷனருக்கு ஷாப் சட்டம் 41 (2)ன் பிரகாரம் அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

அதன் பேரில், ஒரு வருஷமாக முடிவு தெரிவிக்கப்படாமல் இருந்துவந்த வழக்கு 16-9-49ல் தஞ்சை முகாமில் லேபர் கமிஷனர் C. G. ரெட்டி அவர்கள் முன்பாக இருவரும் விசாரிக்கப்பட்டு, இந்தி எதிர்ப்புக்கும் கடைக்கும் சம்பந்தம் இல்லை என்றும், டிஸ்மிஸல் நோட்டீசில் காட்டியிருக்கிற காரணம் சரியல்ல என்றும், இந்த காரணத்திற்கு நீக்கக்கூடாது என்று சொல்லி, மீண்டும் ராமகிருஷ்ணனை வேலைக்கு அமர்த்திக் கொள்ளவேண்டும் என்று தீர்ப்புக் கூறினர்கள் (Case No. 2149) எனத் தோழர் ஏ. எல். முத்தையா எழுதுகிருர்.

கலப்பு மணப் பாராட்டு

இராணிப் பேட்டை, செப். 16—

இவ்வூர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் தோழர் ச. மொ. அருணசலத்திற்கும் (வன்னியாகுலம்) தோழியர் கா. இராசலக்குமிக்கும் (பார்ப்பன வகுப்பு) 7—9—49-ல் நடந்த பதிவுத் திருமணத்தையொட்டி மணமக்களைப் பாராட்டுவதற்காக 16—9—49-ல் ஓர் கூட்டம் நடைபெற்றது. தோழர் என். ஆர். மாணிக்கனர் தலைமையில் தோழர்கள்:— சி. பி. சிற்றரசு, கே. அண்ணுமலை ஆகியோர் பேசினர். (ஒ. கி.)

இனி நடப்பவை

சென்னை. பெத்து நாய்க்கன் பேட்டை நமது எதிர்காலவேலைத் திட்டத்தைப் பற்றியும், கழக அமைப்பு பற்றியும் கலந்து பேசி முடிவு செய்யவிருப்பதால், கழக உறுப்பினர்கள் அனைவரும் 26-9-49 திங்கள் இரவு 8 மணிக்கு பெத்து நாய்க்கன் பேட்டை லாயர் சின்னத்தம்பி முதலித்தெரு 23-ம் எண்ணுள்ள (செல்வம் மன்றம்) மாடிக்கு வருமாறு வேண்டுகிறேன் எனத் தோழர் டி. பரமசிவம் எழுதுகிறார்.

* * *

சென்னை அம்மன் கோவில், 10 வது வட்டம்—"28-9-49 புதன் மாலை 6மணிக்கு எண் 8. போர்ச்சுகீஸ் சர்ச்தெருமாடியில், திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். இவ்வட்டக் கழகத்தினர் கலந்து கொள்ள வேண்டுகிறேன்" எனத்தோழர் சத்தியவாணிமுத்து கேட்டுக்கொள்கிருர்.

* * *

குளித்தலை—இவ்வூர் திராவிடத் தோழர்களின் கூட்டமொன்று தோழர் இராஜு அவர்கள் இல்லத்தில் 2-10-49 மாலை 6-மணிக்கு நடைபெறும். அதுசமயம் "திராவிட முன்னேற்றக் கழகம்" அமைக்கப்படும். திராவிடத் தோழர் அனைவரும் அழைக்கப்படுகிருர்கள்.

சீனாவில் சிவப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருக்கும்.ஒரு பெரிய பதவி—அதிகாரம்— அந்தஸ்து — பணம் திரட்டும் வழி!!

ராணுவத்திலே, சியாங்கின் உறவினரே, தளபதிகள்! சீன நாட்டு ஏழைகளைக் கசக்கிப் பிழியும் முதலாளிகள், சியாங்கின் கூட்டாளிகள்! பெரும் பெரும் பண்ணைகளை ஆண்டு வந்த காட்டு ராஜாக்கள், சியாங்கின் கூட்டுத் தோழர்கள்.

பணம் குவியும், அவர்களிடமிருந்து, சியாங் கேட்கும்போது — பாட்டாளி பதைப்பான் பஞ்சத்தால்— வருத்தத்துக்கு ஓய்வு இராது, சியாங் தர்பாரில். திருமதி சியாங்கோ, அமெரிக்காவின் 'செல்லப்பெண்' — சியாங் தம்பதிகளின் சிரம் அசைந்தால், டாலர் மழைபொழியும்!

பொழிந்தது. டாலர் மழை மட்டுமல்ல-அழிவுக்கருவிகளான ஆயுத மழையே பொழிந்தது. சியாங், விரும்பியபோது-கேட்ட அளவு!—எல்லாம் சீனமக்களை அழிக்க—மாசி டாங்கை முறியடிக்க!

ஏழையின்—ஏக்கத்தின் பிரதிநிதி

மாசிடாங்-சீன ஏழையின் ஏக்கத்தின் பிரதிநிதியாகக் கிளம்பினான்.

சோவியத் புரட்சி ஏற்பட்ட போது, மாசி-டாங்,பெகிங் பல்கலைக் கழகத்திலே, மாணவன்-மன எழுச்சியுடன், புரட்சியைக் கவனித்தான்-பொது உடைமைக் கட்சியைத் துவக்கிப் பணிபுரியலானான்.

அதற்கு முன்புமகூட. மாசிக்கு உழவர்களிடம்உள்ளன்பு. மாசிடாங். ஒரு கிராமச சிறு மிராசுதாரர் மகன்.

உழவர் உழைப்பால், காடு கழனியாகி; செல்வம் சிலரிடம் சென்று கொழிப்பதையும் கண்டான்—ஏழ்மையில் உழன்று உழவர்கள் உருக்குலைவதையும் பார்த்தான்-இந்த வேதனைதரும் முரண்பாட்டை ஒழித்தாகவேண்டும் என்று எண்ணினான், பெகிங் பல்கலைக் கழகத்திலே படிக்கும்போது, ரஷியா, ஏழைக்குப் புதுவாழ்வு பெற்றுத்தந்த புரட்சியைக் கேள்விப்பட்டான்—அவ்வழியே நல்வழி என்று தீர்மானித்துப் பணிபுரியலானான ஏறத்தாழ முப்பதாண்டுகள மும்முரமாகப் பணியாற்றினான்-இதிலே இருபத்தைந்து ஆண்டுகள் கடும்போரில ஈடுபட நேரிட்டது. போர்க்கோலத்துடன் இருந்துகொண்டேதான், இப்போது, சீனக்குடி அரசு அமைத்திருக்கும் செய்தியை, மாசிடாங் உலகுக்கு அறிவித்திருக்கிறார்.

மாசிடாங், சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் முதல்வராகி புதுத்திட்டங்கள் தீட்டிய காலை, சியாங் ஜப்பானியரை விரட்டும், விடுதலைப் போர்த் தலைவனாக விளங்கினார்.

கூட்டு ஒத்துழைப்பு

இருவரும் ஒன்று கூடிப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது.

சியாங்கின் கோமிங்டாங் கட்சியும் மாசிடாங்கின் கம்யூனிஸ்டு கட்சியும் கூட்டாகப் பணிபுரிந்தன, நாட்டு விடுதலைக்கு.

நாட்டு விடுதலையை, நயவஞ்சகத்துக்கு, பாசீசத்துக்குப் பயன்படுத்த சியாங் முனைந்து, வெற்றி பெற்று, அமெரிக்காவுடன் சல்லாபித்துக்கொண்டு, சீனாவைச் சுரண்ட வழிசெய்வது கண்டு, மாசிடாங் மனம் கொதித்து. சியாங்கின் கூட்டுறவை அறுத்துக் கொண்டு, சீறிப்போரிடலானார். சியாங்கின் பலம் அதிகம்-அமெரிக்க உதவி அமோகம்-எனவே மாசிடாங், வேட்டையாடப்பட்டார்-வேதனை, ஆபத்து - சதி - இவைகளுக்கு மத்தியில் இருபதாண்டுகள உலவி, இன்று, இன்பம் தரும் இலட்சியத்தை, உருவாக்கி விட்டார்

இலட்சிய வாதிகளின் படைதிரண்டது

1927ம் ஆண்டு, பகை மூண்டு விட்டது, கோமிங்டாங் கட்சிக்கும்-கம்யூனிஸ்டு கட்சிக்கும் சீமான்களின் பணபலம், அமெரிக்க உதவி, பாமர மக்களின் பாசத்தைப் பெறக்கூடிய பிரசார பலம், ஆகியவை, சியாங்குக்கு! ஏழைக்கு வாழ்வளிக்கும் இலட்சியங்கள், அந்த இலட்சியத்தை நம்பி, மரணப படுகுழியில் வீழவும் தயாராக இருந்த இலட்சியவாதிகளின் படை வரிசை, இவை, மாசிடாங்கிடம். மனம் உடையவில்லை மாசிடாங்-துரத்தப்பட்டார், ஒருகோடியிலிருந்து மற்றோர்கோடிக்கு-சளைக்கவில்லை. மலை மீது பாசறை—குகையிலே வாசம்! உழவர்களிடையே பிரசாரம் உலுத்தர்களுடன் போர்—சிறுசிறு வெற்றிகள்-இப்படி வளர்ந்து வளர்ந்து, 1934க்குள் சியாங், கண்டு அஞ்சவேண்டிய பலம் பெற்று, சீனாவில் ஒரு பகுதியையே, சோவியத்முறையில் ஆளும், வாய்ப்பும்பெற்று விட்டான.

அமெரிக்காவிடம் சியாங் அடைக்கலம்

இதற்கிடையிலே, சியாங், அமெரிக்காவின் பரிபூரண அடிமையாகிவிட்டார். "என்ன சேதி! சீனாவில் முளைத்துள்ள சிவப்பு நட்சத்திரத்தை ஏன் அழிக்காமலிருக்கிறாய்?" என்று அமெரிக்கா கேட்கலாயிற்று; ஆயுதம் வேண்டும் — பணம் வேண்டும்—நிபுணர்கள் வேண்டும், என்று சியாங் கேட்டார்— கொட்டிக் கொடுத்தது அமெரிக்கா.

மாசிடாங்கின் ஆதிக்கத்திலிருந்த, சீன மாவட்டத்தை வளைத்துக்கொண்டன சியாங்கின் படை பலமான முற்றுகை. தப்பி வர முடியாது— உள்ளேயே யிருந்தாலும் தத்தளிக்கவேண்டும். ஒரு நிபுணர் கூறியுள்ளபடி, முயலைச் சுற்றிக் கொண்டு, மலைப்பாம்பு படுத்துக் கொள்வதுபோல, மாசிடாங்கின் ஆதிக்கத்திலிருந்த இடத்தைச் சுற்றிலும், சியாங்கின் இராணுவக் கோட்டைகள் எழும்பிவிட்டன. மாசிடாங், வீழ்ச்சி அடைவது நிச்சயம் என்று கூறினர்—எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். மாசிடாங் கைப் பிடித்துக்கொண்டுபோய், அமெரிக்க எஜமானர்களிடம் காட்டிப் பரிசு பெறலாம் என்று கூட எண்ணி யிருந்திருக்கக்கூடும். அந்தச் சியாங் இன்று, எங்கே ஓடுவது தலைதப்பும் என்ற நிலையில்! அந்த மாசிடாங், இன்று, சீனக்குடி அரசு அமைக்கப்பட்டாகிவிட்டது என்று அறிவிக்கும் நிலையில்!! எவ்வளவு பெரிய மாறுதல்! அதிலே புதைந்துள்ள பாடம் எவ்வளவு மகத்தானது!!

போர்! போர்! ஓயாத போர்!

சியாங்கின் கோட்டையைத் துளைத்துக் கொண்டு ஓடினார், மாசிடாங் படையினர், போரிட்டபடி, பிணங்களைக் களத்திலே போட்டபடி, ஓராண்டுகாலம், பஞ்சம் பட்டினி, ஆபத்து ஆகியவைகளால் சாக்குண்டு தளராமல, 6000 மைல சென்றனர்! உலகமே அதிசயித்தது, இந்த மாவீரனின் மனஉறுதி கண்டு! சீனாவின் சிவப்பு நட்சத்திரமேதான் மாசி என்று, நிபுணர்கள் கூறலாயினர்! சியாங் சீறினார்— தோல்வி அவரைத் துரத்தலாயிற்று, போர்!போர்!ஓயாதபோர்! ஒவ்வொரு மைலுக்கும் போர்! கிராமத்துக்குக் கிராமம் கடும்போர்! ஒவ்வொன்றிலும், மாசிடாங்குக்கே வெற்றி! அமெரிக்கா துடி துடித்தது—மேலும் மேலும டாலர் மழையைப் பொழியச் செய்தது—சீன இரத்தம் ஆறென ஓடிற்று—எனினும் சியாங்கால் தலை காட்ட முடியவில்லை—ஒவ்வோர் பகுதியாக, ஒவ்வோர் மாவட்டமாக, மாசிடாங் கைப் பற்றிக் கொண்டே, விடாது வெற்றிப் பாதையில்கடக்கலானார்.கோமிங்டாங் கலகலத்துப் போயிற்று! சீமான்கள் சிதறி ஓடினர்! சியாங்கே ஓடலானார், ஓரிடம் விட்டு ஓரிடம்—அவர் சென்று தங்குவார் — மாசிடாங்கின் பீரங்கி முழக்க மிடும், நகரம் வீழ்ச்சியுறும், சியாங் அவ்விடம் விட்டு ஓடுவார்! உலகம், கேலி செய்யும் அளவிலும், முறையிலும், சியாங் ஓட வேண்டி நேரிட்டது—இன்னமும் ஓயவில்லை ஓட்டம் — பார்மோசா சென்றால், பிழைத்துக் கொள்ளலாமா, என்று எண்ணுகிறார் சியாங்.

கோமின்டாங் தலைவர் தத்தளிக்கிறார்

எந்தத் தலைவருக்கு ஈடு எவரும் இல்லை என்று பிரசாரம் செய்யப் பட்டதோ, அந்தச் சியாங், ஆட்சியின் பொறுப்பை வேறுயாரரிடமோ தந்துவிட்டு, தலை தப்பினால் போதும் என்று தத்தளிக்கிறார்! எந்த கோமின்டாங் கட்சிக்கு எதிராக வேறோர் கட்சி கிளம்பவே முடியாது என்று வீம்பு பேசினரோ, அந்த கோமிங்டாங், இன்று இடிந்த கோட்டையாகிவிட்டது! எந்த அமெரிக்கா சியாங்கை ஆதரித்து வந்ததோ, அதே நாடு, கைவிட்டுவிட்டதுடன், கபடன், கயவன், காரியம் மாற்றத் தெரியாதவன், என்று பச்சையாகக் கண்டிக்கவே துணிந்துவிட்டது.

பிரிட்டன் 'அச்சாரம்' கூறுகிறது

பிரிட்டனோ, மாசிடாங்கின் புதிய சீனக் குடிஅரசை அங்கீகரிப்பதாக 'அச்சாரம்' கூறுகிறது! மாசிடாங் மகத்தான வெற்றி பெற்றுவிட்டார்—மக்களாட்சி அமைந்துவிட்டது, எஞ்சியிருக்கும் [illegible] கோட்டைகளை [illegible] கொட்டைகளுக்கு, உலவ முடியாது! பிரிட்டிஷ் பிடியிலுள்ள ஹாங்காங்கும், சீனக் குடி அரசைக் [illegible] வாழ முடியாது சீனா, குடி அரசு ஆகிவிட்டது. சீனக் குடி அரசு, மூலம்,... மக்கள் என்ன பலன் அடைய முடியும் என்பதற்கான அறிகுறிகள் போல, மாசிடாங், ஏழைகளுக்கு நில மளித்தல், போன்ற திட்டங்களைப் பல பகுதிகளில ஏற்கனவே அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார்— ஆனால இனித்தான், இலட்சியப் பூர்த்திக்கான திட்டம் வெற்றிகரமானதாக்கப்பட வேண்டும்-மாசிடாங்கின் மனதில் கடந்த முப்பதாண்டுகளாகத் தோன்றி வளர்ந்து வரும் திட்டத்தின் படி சீனா உருவாக்கப்படவேண்டும். வேலை இருக்கிறது நிரம்ப-ஆனால் வேதனை நிரம்பிய உள்ளமல்ல இப்போது-வெற்றிக்களிப்புடன் உள்ளம் இருக்கிறது!

சிவப்பேறிய சீனா!

சீனா சிவப்பாகி விட்டது! மாஸ்கோவின் அடிமையாகி விட்டது என்ற பிரசாரப் போர் துவக்கி, அதையே சாக்காகக் கொண்டு, அமெரிக்கா, உலகப் பெரும் போர் துவக்குமோ, என்ற அச்சம் ஓர் புறம் எழத்தான் செய்கிறது—எனினும், மாசிடாங்கின் மகத்தான வெற்றியை, அதற்காதாரமான மன உறுதியைக் கண்ட பிறகுமா, அமெரிக்கா, வீண் வேலையில் ஈடுபடும், என்ற எண்ணமும் உண்டாகிறது.

புதிய சீனாவில் புது வாழ்வு பிறக்க வேண்டும்

எதிர் காலத்தில், கடினமான வேலை இருக்கிறது, மாசிடாங்குக்குப் புதிய சீனா, ஏட்டிலே உருவாகிவிட்டது போதாது— நாட்டிலே புது வாழ்வு பிறக்க வேண்டும். சீரழிவுபட்டுக் கிடக்கும் சமுதாயம், புதிய நிலை பெற வேண்டும். குற்றுயிராகக் கிடக்கும் பாசிசக்கும்பல் அடியோடு அழிந்தாக வேண்டும். அமெரிக்க கண் பார்வை ஆபத்தை மூட்டாதபடி ஆக்கப்பட வேண்டும். ஸ்டாலின்— டிட்டோ தகராறு போல், சம்பவம், சிக்கல், எழாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்— சியாங் அமெரிக்காவின் ஆடும் பதுமையானார், மாசிடாங் மாஸ்கோவின் அடிமையானார் என்ற பேச்சு ஏற்படவும் கூடாது— வேலை, மிக மிக அதிக மிருக்கிறது மாசி டாங்குக்கு. எனினும் முப்பதாண்டுகள் மும்முரமாக, பணிபுரிந்து, உருவாக்கிய சீனக் குடிஅரசைக் கண்டுவிட்டார்— எந்த வீரனும் இந்த வெற்றியைக் கண்டு மகிழாமல் இருக்க முடியாது. உலக வரலாற்றிலே, மாசிடாங் ஓர் உன்னதமான இடம் பெற்றுவிட்டார். சீன வரலாற்றிலே, புதியதோர் சகாப்தம் துவங்குகிறது.

சீனா, குடி அரசு ஆகிறது— சன்யாட்சன் விரும்பிய வழி செல்கிறது—வாழ்க சீனக் குடி அரசு! வளர்க அதன் வளம்! என்று வாழ்த்துகிறோம். மாவீரன் மாசிடாங்குக்கு விடுதலை விரும்பும் மக்களின் காணிக்கையாக, வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருத்தம்

சென்னை 24-9-49 "மாலைமணி" முன்பக்கம் 2-வது பத்தியின் இறுதியில் (Temperance Propaganda) என்றிருக்க வேண்டும் திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஆசிரியருக்கு முடங்கல்

அரசாங்கம் கவனிக்குமா?

ஐயா,

வணக்கம்.

எங்கள் ஊரில் சுமார் 5000 கைத்தறிகள் இருக்கின்றன. இவைகளை நம்பி வாழும் தொழிலாளிகள் சுமார் 10,000 பேர் இருப்பார்கள். இவர்கள் 46 அங்குல அகலத்தில் 120 கெஜம் நெய்தால் கிடைக்கக் கூடிய கூலி ரூ 7. இதை நெய்து முடிக்கச் சுமார் 16 நாள் ஆகும். இந்த 7 ரூபாயை வைத்துக் கொண்டு நெசவாளிகள் எப்படி 16 நாட்கள் தம் குடும்பத்தை நடத்த இயலும்? அதிலும் 100 க்கு 50 நெசவாளிகளுக்குத்தான் வேலை கிடைக்கிறது. பிச்சையெடுத்து வாழக் கூடிய நிலையில் ஆய்விட்ட இந்த நெசவாளர்களின் மேல், சென்னை அரசாங்கத்தார் கருணை செலுத்தி, உடனடியாக அவர்களின் இல்லங்களுக்குச் சென்று, நிலைமையறிந்து ஆதரவான செய்வார்களா?

இங்ஙனம்,
சு. ராசன்
மாணவன்

ஸ்ரீ வில்லிபுத்தூர்
21—9—49

திருப்பூர் திராவிடத் தோழர்களுக்கு. அறிவிப்பு.

திருப்பூர், செப். 22— இப்பவும்தோழர் அண்ணாத்துரையைப் பொதுச் செயலாளராகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அங்கத்தினர்களாகச் சேரும் தோழர்கள், திருப்பூர், புதுமார்க்கெட் வீதியில் உள்ள மணி டீ ஸ்டாலில், தயவு செய்து அங்கத்தினர்களாக, பதிவு செய்து கொள்ளவும். முன்னேற்றக் கழக தற்காலிக அமைப்பு ஏற்படுத்த வேண்டி இருப்பதாலும், அக்டோபர் திங்கள் 16ல, முன்னேற்றக் கழகத் துவக்க விழா ஆற்றவேண்டி இருப்பதாலும் கூடியவரையில்சீக்கிரமாக வந்து அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப் படுகிறார்கள் எனத் திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர்கள் தோழர்கள் க. சுப்பிரமணியம், தி. நடராசன் ஆகியோர் எழுதுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றம்
அய்வநல்லூர் கிளை

அய்வநல்லூர், (நாகை) செப். 18- இன்று மாலை 7 மணிக்கு தோழர் என். எம். தங்கவேலு அவர்கள் தலைமையில் "திராவிட முன்னேற்றக் கழகம்" அமைக்கப்பட்டு, தோழர் வி. எம். வேலுவை செயலாளராகக் கொண்ட ஓர் செயற்குழுவும் அமைக்கப்பட்டது. 17—9—49-ல் நடந்த சென்னைக் கூட்டத்தின் முடிவை ஆதரித்தும் வேறு பல விஷயங்கள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன எனத் தோழர் வி. எம். வேலு அறிவிக்கிறார்.

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்

சென்னையில் கடைசி முறையாக எட்டே நாட்கள் நடைபெறும்.

ஔவையார்

25-9-49 முதல் 2-10-49 வரை.
ஞாயிறு, புதன், வெள்ளி மாலை 6.
மற்ற நாட்கள் இரவு—9-15

4—10—49 முதல்
"உயிரோவியம்"
தொடர்ந்து நடைபெறும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, [illegible] Muthumari Chetty Street, Madras-1.